


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. கெட்ஸி லீமா அமலினி அவர்களின் முன்னிலையில், திறந்தவெளி மலங்கழித்தால் ஏற்படும் சுகாதார கேடு குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், 24 மணி நேர நாதஸ்வரம் மற்றும் தவில் இசை முழக்கம் நிகழ்ச்சியினை வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில், இன்று (13.08.2016) துவக்கி வைத்தார்கள்.

செ.வெ.எண்: 527/2016 நாள்: 13.08.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 95 கிராம ஊராட்சிகளிலும் "திறந்தவெளி மலங்கழித்தல் இல்லை" என்ற நிலையை அடைந்துள்ளோம். வடசேரி கிறிஸ்டோபர் பேரூந்துநிலையத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியினை இன்று (13.08.2016) துவக்கி வைத்து, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தகவல்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு திட்டமான "முழு சுகாதார தமிழகத்தை" உருவாக்கிட தூய்மை பாரத இயக்கத்தின் கீழ், பல்வேறு நடவடிக்கைகள் எடுத்ததின் அடையாளமாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 95 கிராம ஊராட்சிகளிலும் "திறந்தவெளி மலங்கழித்தல் இல்லை" என்ற நிலையை அடைந்துள்ளோம். மேலும் பொதுமக்கள் தங்களது வீட்டில் உள்ள கழிப்பறைகளை பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம், பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் படி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக பொதுமக்கள் அதிகமாக வந்து செல்லும் இடமான, வடசேரி கிறிஸ்டோபர் பேரூந்து நிலையத்தில், 24 மணி நேர நாதஸ்வரம் மற்றும் தவில் இசை முழக்கம் நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. கெட்ஸி லீமா அமலினி அவர்களின் முன்னிலையில், இன்று (13.08.2016) துவக்கி வைத்து, தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 95 ஊராட்சிகளிலும் "திறந்தவெளி மலங்கழித்தல் இல்லை" என்ற நிலையை அடைய, 99.5 சதவீதம் ஊராட்சிகளில் கழிப்பறைகள் கட்டப்பட்டும், மீதி உள்ள பகுதிகளில் சமுதாய கழிப்பறைகள் கட்டப்பட்டும் 100 சதவீத இலக்கை அடைந்துள்ளோம். இதற்கு அரசால் தலா ரூ.12 ஆயிரம் வழங்கப்பட்டது.

மேலும் பொதுமக்கள் தங்களது வீட்டில் உள்ள கழிப்பறைகள் மட்டுமே பயன்படுத்தி கொள்ள வேண்டும். இல்லையென்றால், நிலத்தடி நீரில் மலம் கலந்து கொள்வது மட்டுமல்லாமல், டையரியா போன்ற தொற்று நோய்கள் ஏற்படும் என்பதை குறித்து, அவர்களிடையே விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ள, மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

அதன் ஒரு அடையாளமாக இன்று (13.08.2016) காலை 10 மணி முதல், நாளை (14.08.2016) காலை 10 மணி வரை 24 மணி நேரம் கலைத்தென்றல் திரு. எம்.முத்துசுவாமி மற்றும் கிராமிய கலைச்செல்வன் திரு. கே. நடராஜன் ஆகியோர்களால் நாதஸ்வரம் மற்றும் தவில் இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டு, விழ்ப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

ஊராட்சி அளவில், திறந்தவெளியில் மலங்கழித்தல் இல்லையென்ற நிலையை அடைந்தது போல், நகராட்சிகளில் மற்றும் பேரூராட்சிகளில் 100 சதவீத இலக்கை அடைய, பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு, மாவட்ட நிர்வாகத்திற்கு வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி. சசிகலா, நகராட்சி பணியாளர்கள், கிராமிய கலைஞர் திரு. பழனியாபிள்ளை ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.